## மாத்தறை மாநகர சபை
## மாத்தறை மாவட்டம்

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஆகஸ்ட் 12 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 செப்டம்பர் 01 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் அடங்கியுள்ள எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மாத்தறை மாநகர சபையின் 2010 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்க முடியாதுள்ளேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சரியான ஆரம்ப மீதி காணப்படாத 06 கணக்கு விடயங்களை வகைப்படுத்தாமல் ரூபா 15,228,857 தொகையானது மீளச் செலுத்த வேண்டிய வைப்பு மீதியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நாட்குறிப்பு இல. 55 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் களஞ்சிய முற்பணம் மற்றும் களஞ்சிய கடன்கொடுத்தோர் கணக்கு என்பவற்றிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 69,871 தொகையான நிலையான சொத்துக்களின் பெறுமதிகளுக்குரிய நிலையான சொத்துக் கணக்கு மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு என்பவற்றிற்கிடையே சீராக்கங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்குரிய கலி பவுசருக்கான ரூபா 23,622 தொகையான கடன் தவணைப்பணம் கடன் கணக்கிற்கு வரவு வைக்கப்படாது இடைப்பட்ட கடன் தவணைப் பணக் கணக்கிற்கு நாட்குறிப்புப் பதிவு இல. 48 இன் மூலம் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டின் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் தவணைக் கொடுப்பனவு, செலவினமொன்றாக கணக்கு வைக்கப்பட்ட போது நாட்குறிப்புப் பதிவு இல. 43 இன் மூலம் ரூபா 84,261 தொகையான செலவினம் அதிகரித்தல் குறைவுக் கணக்கிற்கு மீள வரவு வைக்கப்பட்டு இருமுறை கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் இல. 1204 ஸ்ரீ (எஸ்எப்) நகர அபிவிருத்தி பிரிவு செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட மாத்தறை பஸ் நிலையம் மற்றும் வியாபாரத் தொகுதிக்காக மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தவேண்டிய கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி என்பன ரூபா 67,736,561 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 49,774,022 எனக் காட்டப்பட்டதனால் வேறுபாடு ரூபா 17,962,539 ஆக இருந்தது.

(ஊ) பஸ் நிலையம் மற்றும் வியாபாரத் தொகுதி என்பவற்றை நிர்மாணிப்பதற்கான கடனை மீளச் செலுத்துவதற்காக பேணப்பட்டு வருகின்ற றுஹுணு அபிவிருத்தி வங்கிக் கணக்கு இல. 14600 என்ற சேமிப்புக் கணக்கின் வட்டி சபையின் வருமானமொன்றாக இல்லாத போதிலும் நாட்குறிப்பு பதிவு இல. 23 இன் மூலம் ரூபா 94,499 தொகை மீளாய்வாண்டில் பெறப்பட்ட வட்டி வருமானமாக கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(எ) பஸ் நிலைய வியாபாரத் தொகுதியை நிர்மாணிப்பதற்கான கடன் கணக்கின் இல. 04 இன் நிபந்தனையின் பிரகாரம் அக்கடன் பணத்தை தீர்ப்பதற்கான உரிய வருமானப் பெறுவனவுகள் சபை வருமானமொன்றாக இல்லாத போதிலும் நாட்குறிப்புப் பதிவு இல. 65 இன் மூலம் ரூபா 4,626,325 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஏ) பஸ் நிலைய வியாபாரத் தொகுதியை நிர்மாணிப்பதற்கான கடன் ஒப்பந்தத்தின் நிபந்தனை இல. 9.03 இன் பிரகாரமும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் 2001 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய 7/3/12 மாத்தறை ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரமும் அக் கடன் பணத்தைத் தீர்ப்பதற்கு குறிக்கப்பட்ட நிலையான வைப்பு மற்றும் அதற்காகக் கிடைக்கின்ற வட்டி வருமானம் என்பவற்றை ஏனைய செயற்பாடுகளில் ஈடுபடுத்த முடியாதிருந்த போதிலும் நாட்குறிப்புப் பதிவு இல. 66 இன் மூலம் ரூபா 3,726,500 தொகை நிலையான வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டு 15182 ஆம் இலக்க வங்கிக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு நாட்குறிப்புப் பதிவு இல. 67 இன் மூலம் அக்கணக்கிலிருந்து சபையின் ஏனைய கடன் கணக்குகளின் வட்டி செலுத்துகைகளுக்காக ரூபா 3,777,516 தொகை அகற்றப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 36,441,390 தொகையான பங்களிப்புப் பணம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 தீர்க்கப்படாத கணக்குகள்

தீர்க்கப்படாத ரூபா 9,028,102 தொகையான 04 கணக்கு மீதிகள் நீண்டகாலத்திலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 06 கணக்கு விடயங்களுக்குரிய பெறுமதி ரூபா 97,107,392 ஆக இருந்ததுடன், சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் பெறுமதி ரூபா 85,685,778 ஆக இருந்தமையால் வேறுபாடு ரூபா 11,421,614 ஆக இருந்தது.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை மிமைத்துள்ள செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 183,059,443 ஆகும்.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

07 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 191,075,851 பெறுமதியான மீதிக்கான மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள், உரிமை, உளமை என்பவற்றை உறுதிப்படுத்தும் ஆவணங்கள், பட்டோலைகள், மீதி உறுதிப்படுத்தல், விளக்கமளித்தல்கள் என்பன காணப்படாமையால் அவ்விடயங்களை கணக்காய்வின் போது திருப்திரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.6 பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 19 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அனுப்பியிராததுடன் அவ் ஐய வினாக்களுடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 21,403,834 ஆக இருந்தது.

பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்களின் காலப்பகுப்பாய்வு பின்வருமாறு இருந்தது.

| **கால எல்லை** | **ஐய வினாக்களின் எண்ணிக்கை** |
|---|---|
| 03 மாதத்திற்கு குறைவு | 02 |
| 03 மாதம் தொடக்கம் 01 வருடம் வரை | 06 |
| 01 வருடம் தொடக்கம் 02 வருடம் வரை | 07 |
| 02 வருடம் தொடக்கம் 03 வருடம் வரை | 04 |
| | 19 |

### 1.3.7 சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) | நி.பி. 371 மற்றும் நி.பி.371(2)(ஈ) | பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணம் குறிப்பிட்ட செயற்பாடு முடிவடைந்தவுடன் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 1999 முதல் 2010 வரை 28 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 1,531,481 தொகையான முற்பணங்கள் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நி.பி.571 | உரிமைகள் குறிப்பிடப்படாத ரூபா 14,380,192 தொகையான காலங் கடந்துள்ள வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ 2002/02 ஆம் இலக்க திறைசேரிச் செயலாளரின் சுற்றுநிருபம் | சபைக்குரிய 41 கணனிகள் மற்றும் மென்பொருள்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | ஓய்வூதியப் பணிப்பாளர் மற்றும் அரசாங்க சேவை சேமலாப நிதி முகாமைத்துவச் சபைத் தலைவரின் 2003 திசெம்பர் 02 திகதிய சுற்று நிருப இலக்கம் 1/2003 | ஓய்வூதியம் இன்றி அரச சேவையில் கடமையாற்றும் ஊழியர்களிடமிருந்து நாளாந்த கொடுப்பனவு அல்லது மாதாந்த படி சம்பளங்களின் மீது 8% பங்களிப்புத் தொகை அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கு செலுத்த வேண்டிய போதிலும் அவ் அறிவுறுத்தல்களுக்கு முரணாக இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பாக 2010 ஆம் ஆண்டு வரை அதற்காக ரூபா 2,737,294 பங்களிப்புப் பணம் செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், சபையின் 2010 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,818,001 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,198,762 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வு ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் உட்பட நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் 2011 பெப்ரவரி 28 திகதிய எனது கடிதத்தின் பிரகாரம் குறிப்பிட்ட படிவத்தில் சமர்ப்பிக்கும் படி நகர ஆணையாளரை வேண்டிக் கொண்ட போதும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை வருமானக் கூற்றின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலைமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளது.

| விபரங்கள் | திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை வருமானம் | | அதிகரிப்பு சதவீதப்படி | குறைவு சதவீதப்படி |
|---|---|---|---|---|
| | 2010 | 2009 | % | % |
| | ரூபா. 000’ | ரூபா. 000’ | | |
| ஏக்கர் வரி | 29,336 | 27,075 | 8.35 | - |
| வர்த்தக அனுமதிப்பத்திரம் | 2,702 | 2,496 | 8.25 | - |
| வுாடகை | 40,918 | 38,242 | 6.99 | - |
| ஏனைய வருமானங்கள் | 3,256 | 3,415 | - | 4.65 |

### 2.2.2 நிலுவை வருமாணத்தை அறவீடு செய்தல்

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆவது அத்தியாயம்) 171 ஆவது பிரிவின் பிரகாரம் சபையினால் அறவிட வேண்டிய சகல வருமானங்களையும் அறவிடும் அதிகாரம் நகர ஆணையாளருக்குரியதாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 76,212,434 தொகையான நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 களியாட்ட வரி

---

2006 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து நிதிக் கூற்றுக்களில் முன்கொண்டுவரப்படுகின்ற நானாவித கடன்பட்டோர் மீதியில் காணப்படுகின்ற ரூபா 4,599,518 தொகையான உள்ளுராட்சி ஆணையாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய களியாட்ட வரித் தொகை மீளளிப்புச் செய்யப்படாமல் மீளாய்வாண்டின் போதும் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

**2.2.4 ஆதன வரி**

---

சபை அதிகாரப் பிரதேசத்தில் வதிவிட, வியாபார நுகர்வோர்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்கள் என்பவற்றை உள்ளடக்கிய 21,923 ஆதனவரியாளர்கள் காணப்பட்டதுடன் கடந்த 05 வருடங்களில் பட்டியிலிடப்பட்ட தொகை, அறவிடப்பட்டிருந்த தொகை மற்றும் நிலுவையான அளவுகள் வருடாந்தம் அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த தொகை ரூபா 25,386,174 ஆகும்.

இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு

(i) ஒவ்வொரு வருடத்திலும் ஆதன வரி அறவீடு செய்யும் செயல் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்யக்கூடிய வகையில் ஒவ்வொரு வருடத்திலும் பட்டியலிடப்பட்ட தொகையில் மிளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்த தொகையினை கணிப்பீடு செய்யக்கூடிய முறையில் கணனிமயப்படுத்தக்கூடிய மென்பொருளொன்று காணப்படவில்லை.

(ii) நிலுவை ஆதன வரியை அறவீடு செய்வதற்காக மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 252(1) (ஆ) பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ரூபா 21,371,657 தொகையான வரி 09 சேகரிப்பாளர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் 03 ஆம் காலாண்டில் அறவிடப்பட்டிருந்த தொகை ரூபா 3,545,339 ஆக இருந்தது. அறவீடு செய்யும் செயல் முன்னேற்றம் 16% ஆன குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

(iii) மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 252(1) (ஆ) பிரிவின் பிரகாரம் ஏதாவது ஆதனவரி செலுத்தப்படாதிருந்தமை தொடர்பாக அவ் ஆதன வரி அறவிட வேண்டிய இடத்தின் உரிமையாளரின் அசையும் அல்லது அசையாத சகல சொத்துக்களையும் அவ்விடத்தை அல்லது அதன் அடிப்படையிலான நபருக்குச் சொந்தமான சகல அசையாத சொத்துக்களையும் தடை செய்து விற்பனை செய்து அவ் ஆதன வரி மற்றும் அறவிடல் கட்டணங்கள் என்பவற்றை அறவீடு

செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் 2006 ஆம் ஆண்டிலிருந்து 2010 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் ரூபா 25,386,174 தொகையான நிலுவை ஆதன வரி தொடர்பாக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கடை வாடகைக்கு விடல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) மாத்தறை பஸ்நிலைய கடைகள்

(i) மாத்தறை பஸ்நிலைய வியாபாரத் தொகுதியின் நிர்மாணங்களுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் இல. 1204 ஶ்ரீ (எஸ்எப்) நகர அபிவிருத்திப் பிரிவு செயற்திட்டத்தின் கீழ் 1995 சனவரி 03 மற்றும் 1997 ஆகஸ்ட் 28 ஆந் திகதிகளில் நகர அபிவிருத்தி அதிகாரச சபையுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் ரூபா 108,204,397 தொகை செலவிடப்பட்டு கீழ் மாடியில் 11 கடைகளும் மேல் மாடியில் 110 கடைகளும் ஆக 121 கடைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அதில் நிலுவையாக இருந்த வாடகைப் பணம் ரூபா 3,882,250 ஆகும்.

(ii) இக்கடைகளை வாடகைக்கு விடுவதற்காக 2000 மார்ச் 08 ஆந் திகதி கேள்வி கோரப்பட்டிருந்த போதிலும் கேள்வி ஆவணங்கள், கேள்வி மதிப்பீடு அறிக்கை, கேள்விச் சபைத் தீர்மானம் மற்றும் அதற்குரிய சபைத் தீர்மானம் என்பவற்றை உள்ளடக்கிய கோவையொன்று காணப்படவில்லை.

(iii) கேள்வி ஆவணத்தின் 2.12 ஆம் நிபந்தனையின் பிரகாரம் உடன்படுகின்ற தொகையில் 50% ஆனது 14 நாட்களுக்குள்ளும் மிகுதி 30 நாட்களுக்குள்ளும் மூன்று மாத வாடகை ஒரே தடவையில் செலுத்த வேண்டும். அதன் பிரகாரம் ஆகக் குறைந்தது ரூபா 55,780,250 தொகை கிடைக்க வேண்டியிருந்த போதிலும் 2000 ஏப்ரல் 14 தொடக்கம் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் ரூபா 34,515,731 தொகை மாத்திரம் கிடைத்திருந்தது.

(iv) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 185(2)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பெறப்படுகின்ற வாடகை 186 ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக அமைச்சரினால் அங்கீகரிக்கப்படாத றுஹுணு அபிவிருத்தி வங்கியின் சேமிப்புக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

(v) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 383 இன் பிரகாரம் வங்கிக்கு நேரடியாக பணம் செலவு வைக்கின்ற போது வங்கிக்கு பணத்தை வைப்புச் செய்யும் உறுதிச்சீட்டுக்களில் வெற்றுப் படிவங்கள் வழங்கப்பட்டால் தவிர பணம் செலுத்தியவரை அழைத்து அவ் உறுதிச்சீட்டை பூர்த்தி செய்திருக்காததுடன் நி.பி. 395 இன் பிரகாரம் கணக்கின் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக மாதாந்த அறிக்கைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படாமையினால் உள்ளவாறான பெறப்பட்ட தொகை தொடர்பாக உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

(vi) சபையினால் பேணப்பட்டிருந்த கோவைகளின் பிரகாரம் சேகரிக்கப்படுகின்ற பணம் மற்றும் கடை வாடகையாக 121 கடைகளிலிருந்தும் ரூபா 34,515,731 தொகை கிடைத்திருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் நுஹுணு அபிவிருத்தி வங்கியின் அறிக்கையின் பிரகாரம் ரூபா 32,790,831 தொகை கிடைத்திருந்தமையினால் ரூபா 1,724,900 ஆன வேறுபாடு காணப்பட்டது.

(vii) இக் கடைகள் தொடர்பாக 2011 ஏப்ரல் 29 ஆந் திகதிய களப் பதிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

* மேல் மாடியில் 39 கடைகள் மூடப்பட்டிருந்ததுடன் அதிலிருந்து 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த தொகை ரூபா 1,657,858 ஆக இருந்தது.

* உடன்படிக்கையின் நிபந்தனை இல 5.2.5 இற்கு முரணாக 16 வாடகையாளர்கள் தமது வியாபார உரிமையை வேறு நபர்களுக்கு கையளித்திருந்ததுடன் அக்கடை உரிமையாளர்களிடமிருந்து சபை அறவிடும் வாடகையில் பத்துமடங்கு மற்றும் பன்மடங்கான அதிக வாடகையை அறவிட்டுக் கொண்டிருந்தனர்.

* உடன்படிக்கை நிபந்தனை இல. 5.2.5 இற்கு முரணாக சபையின் அனுமதியின்றி கடைகள் வாடகைக்கு கொடுக்கப்பட்ட பத்து

நபர்கள் கடைவாடகை உரிமையை வேறு நபர்களுக்கு சபைக்குச் செலுத்திய மொத்தப் பணத்தை விட அதிகரித்த பெறுமதிக்கு விற்பனை செய்திருந்த போதிலும் அது தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) ரூபா 108,204,397 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட பஸ் நிலைய வியாபாரத் தொகுதிக்காக செலவு செய்யப்பட்ட தொகையில் ரூபா 87,645,561 தொகை மீளச் செலுத்தவேண்டிய கடன் பணத்தில் அதாவது ரூபா 6,324,000 தொகையான கடன் தவணைப் பணமும், பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக வருடாந்தம் செலவு செய்வதற்கு ஏற்பட்ட ரூபா 3,203,124 தொகையான செலவினத்துடன் ஒப்பிட்டு வருடாந்தம் அறவிடப்படுகின்ற ரூபா 3,441,000 வாடகை வருமானத்துடன் இணக்கஞ் செய்த போது இவ்வியாபாரத் தொகுதி சபைக்கு மேலதிகப் பொறுப்பினை ஏற்படுத்தியிருந்தது.

**(ஆ) பொதுச் சந்தை வியாபாரத் தொகுதியின் முதலாவது மாடியிலுள்ள கடைகளை வாடகைக்குவிடல்**

---

நடைபாதை வியாபாரிகளுக்கான பழைய பொதுச் சந்தை வளவிலுள்ள வியாபாரத் தொகுதியின் மேல் மாடியில் 194 கடைகளிலிருந்தும் ஒன்றுசேர்கின்ற பணம் மற்றும் கடை வாடகை அறவீடு செய்தல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு.

(i) இக் கடைகளை வாடகைக்கு வழங்கும் போது ஒன்றுசேர்கின்ற பணத்தை அறவிடுதல், கடைவாடகை அறவிடுதல் தொடர்பாக 1996 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் அவைகள் அமுல்படுத்தப்பட்டிராததுடன் 2006 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 7/1 ஆம் இலக்க நிலையியற் குழு தீர்மானத்தில் மேற்கூறப்பட்ட சகல கடடைகளிலிருந்தும் ரூபா 35 இலட்சம் ஒன்றுசேர்ந்த பணமும் கடையொன்றுக்கான மாதாந்த கடை வாடகையாக ரூபா 2,000 தொகையும், ஒரு கடை உரிமையாளரிடமிருந்து ரூபா 35,000 தொகையான மீளச் செலுத்தாத வைப்பினையும் பெறுவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் வாடகைப் பணம் அறவிடப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) வருமானப் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதிவரையில் 68 கடைகளிலிருந்து ரூபா 1,330,000 தொகையான ஒன்று சேர்த்த பணம் அறவிடப்படாதிருந்ததுடன் உடன்படிக்கையின் நிபந்தனையின் பிரகாரம் நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2011 ஏப்ரல் 29 ஆந் திகதிய களப்பரிசோதனை சந்தர்ப்பம் வரையிலும் 83 கடைகளில் வியாபார நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டு மூடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அவைகளில் நிலுவையாக இருந்த தொகை ரூபா 2,672,921 ஆகும். மேலும் வியாபார நடவடிக்கைகளைச் செய்து கொண்டிருந்த 33 கடைகளிலிருந்தும் ரூபா 1,587,589 தொகையான கடைவாடகை நிலுவையாக இருந்தது.

(iv) மேல்மாடியில் ஆறு கடைகளின் ஒன்று சேர்ந்த பணங்களைச் செலுத்திய நபர்களுக்கு அக்கடைகள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கையளிக்கப்பட்டிருக்காததுடன் அதன் காரணமாக அக் கடைகளிலிருந்து கடை வாடகைகளை அறவீடு செய்வதற்கும் முடியாதிருந்தது.

(v) பொதுச் சந்தை வியாபாரத் தொகுதியில் கீழ் மாடியில் 36 கடைகளில் 12 கடைகள் எவ்வித வியாபார செயற்பாடுகளிலுமின்றி மூடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் அவைகளிலிருந்து ரூபா 806,190 தொகை நிலுவையாக இருந்தது.

(vi) கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கீழ் மாடியில் 36 கடைகளிலிருந்து ரூபா 6,692,795 தொகையான ஒன்றுசேர்ந்த பணம் அறவிடவேண்டியிருந்த போதிலும் அதற்காக வருமானப் பதிவேடொன்று பராமரிக்கப்படாதிருந்தும் அப்பணம் அறவிடவேண்டியதாகவும், நிலுவைப் பணம் எங்கே காணப்படுகின்றது என்பதனையும் உறுதிப்படுத்த முடியவில்லை.

**(இ) கொட்டுவேகொட 26 கடைகள்**

--------------------------------------------------

(i) 1995 ஆம் ஆண்டில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட இந்த 26 கடைகளிலிருந்தும் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1,436,815 தொகை அறவிட வேண்டியிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் மதிப்பீட்டு வாடகை 05 வருடங்களுக்கு ஒருதடவை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் நிலுவையாக இருந்த வாடகையை அறவீடு செய்வதற்கான சட்டரீதியான நடவடிக்கைகள் 08 கடைகளுக்காக மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) கடை வாடகை உடன்படிக்கைக்கு முரணாக 05 கடைகளில் எவ்வித வியாபார நடவடிக்கைகளுமின்றி மூடப்பட்டிருந்ததுடன் 08 கடைகள் களஞ்சியமாக உபயோகிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் இக்கடைகளிலிருந்து முறையே ரூபா 135,607 மற்றும் ரூபா 174,314 தொகைகள் நிலுவையாக இருந்தது.

(iii) உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் ரூபா 50,000 ஒன்றுசேர்ந்த பணம் மற்றும் மூன்றுமாத வாடகையின் மூன்று மடங்கிற்குச் சமமான பணம் பிணைவைப்பாக பெறப்பட்டதா என்றும், மாதாந்த வாடகை உரிய பிரகாரம் கிடைக்கின்றதா என்பதனையும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு முறையான வருமானப் பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) கங்க பட கடைத் தொகுதியின் 09 கடைகள்**

---

(i) இக் கடைகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,586,010 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை வாடகை ரூபா 295,009 ஆகவும் 05 ஆம் இலக்க கடையில் ரூபா 100,000 தொகையான ஒன்று சேர்கின்ற பணமும் நிலுவையாக இருந்ததுடன் உடன்படிக்கை நிபந்தனை இல 11 இன் பிரகாரம் நிலுவையாக இருந்த பணத்தை அறவீடு செய்வதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இக் கடைகளில் ரூபா 144,259 தொகை நிலுவையாகக் காணப்பட்ட 05 கடைகளில் எவ்வித வியாபார செயற்பாடுகளுமின்றி மூடப்பட்டிருந்தமையினால் சபை செலவிட்ட பணம் பொது மக்களின் நலன்களில் பயன்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

**(உ) ஏனைய வாடகை**

மீளாய்வாண்டின் இறுதியில் கொட்டுவேகொட சிறுவர் பூங்காவின் 45 கடைகளிலிருந்தும் நான்கு வருட காலப்பகுதியில் ரூபா 5,529,705 தொகையும் வல்கம 14 சந்தைக் கடைகளிலிருந்து ரூபா 101,080 தொகையும், 06 மீன் கடைகளில் மற்றும் ஏனைய 21 வரிசைக் கடைகளிலிருந்தும் முறையே ரூபா 14,824 தொகைகள் மற்றும் ரூபா 137,471 தொகைகள் என்பன நிலுவையாக இருந்தன.

மேலும் பத்துதா சந்தைக் கடைகளின் எண்ணிக்கை, அறவிடவேண்டிய நிலுவைப் பணம் மற்றும் வாடகை அறவிடப்படும் வருமானப் பதிவேடு போன்ற விபரங்கள் சபையிடம் காணப்படவில்லை.

### 2.2.6 நீதி மன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதிவான் நீதி மன்றத்தினால் 2010 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட்டு மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 288,641 தொகையான தண்டப் பணம் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.7 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 22,745,203 தொகையான முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.2.8 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் விளம்பர அறிவித்தல் பலகைக் கட்டணம்

மீளாய்வாண்டு மற்றும் இதற்கு முந்திய வருடங்களுக்குரிய நிலுவை வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் நிலுவை விளம்பர அறிவித்தல் பலகைக் கட்டணம் என்பன முறையே ரூபா 887,212 மற்றும் ரூபா 1,763,472 தொகைகளை அறவீடு செய்வதற்கு வழக்குத் தொடரப்பட்டிருந்த போதிலும் அவ் வழக்கு தொடர்பாக பிடிபயாணை பிறப்பிக்கப்பட்டதை தவிர வேறு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவுகள் உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| **செலவின விடயம்** | **பாதீடு** | **உள்ளவாறான** | **முரண்** | **பாதீடு** | **உள்ளவாறான** | **முரண்** |
| **மீண்டுவரும் செலவுகள்** | **ரூபா. 000'** | **ரூபா. 000'** | **ரூபா. 000'** | **ரூபா. 000'** | **ரூபா. 000'** | **ரூபா. 000'** |
| ஆளுக்குரிய வேதனம் | 141,852 | 112,418 | 29,434 | 136,391 | 108,141 | 28,250 |
| ஏனையவை | 72,588 | 48,890 | 23,698 | 88,191 | 49,918 | 38,273 |
| உப கூட்டுத் தொகை | 214,440 | 161,308 | 53,132 | 224,582 | 158,059 | 66,523 |
| மூலதன செலவுகள் | 15,183 | 30,792 | (15,609) | 85,057 | 46,800 | 38,257 |
| மொத்தக் கூட்டுத் தொகை | 229,623 | 192,100 | 37,523 | 309,639 | 204,859 | 104,780 |

(அ) மீளாய்வாண்டின் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டில் காணப்படுகின்ற விடயங்கள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களுடன் ஒப்பீடு செய்து அதில் அவதானிக்கப்பட்ட முரண்களுக்கான காரணங்களைச் சுட்டிக் காட்டும் வருடாந்த கூற்றொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த பாதீட்டில் இலக்கிடப்பட்ட செலவினங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட நிதி அச்செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்படாமல் 13 குறைநிரப்பு பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 8,720,041 தொகையானது செலவினத் தலைப்பிற்கிடையே நிதி மாற்றப்பட்டிருந்தமையினால் பாதீடானது ஆக்க பூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஊழியர் தரம் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| நிறைவேற்றுனர் | 04 | 04 |
| இரண்டாம் தரம் | 120 | 62 |
| ஆரம்ப தரம் | 253 | 249 |
| ஏனையவை(அமைய, பிரதியீட்டு, மதிப்பீட்டு, ஒப்பந்த) | - | 197 |
| மொத்தம் | 377 | 512 |

(அ) மீளாய்வாண்டின் வருமானச் செலவினக் கணக்கின் பிரகாரம் பதவியணினரின் சம்பளத்திற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 112,418,154 ஆக இருந்த போதிலும் உள்ளூராட்சி ஆணைாளரிடமிருந்து ரூபா 75,084,000 தொகை மாத்திரமே மீளளிக்கப்பட்டிருந்தமையினால் இதன் பிரகாரம் சபை நிதியத்திற்கு ரூபா 37,334,154 தொகையான மேலதிகச் செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) திறைசேரிச் செயலாளரின் 2002 சனவரி 03 ஆம் திகதிய மற்றும் 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் 14 ஆம் மற்றும் 28 ஆம் இலக்கத்தினால் உள்ளூராட்சி நிறவனங்களின் அமைய, நாளாந்த மற்றும் ஒப்பந்த ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளல் கைவிடப்பட்டிருந்த போதிலும் அவ் அறிவுறுத்தல்களுக்கு முரணாக 197 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டில் சம்பளமாக சபை நிதியத்திலிருந்து ரூபா 34,572,657 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் 90 சபை தொழிலாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,367,229 தொகையான சம்பளமற்ற விடுமுறைகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படடிருக்கவில்லை.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 செயற்பாடற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

சபையின் மோட்டார் வாகனம் மற்றும் வண்டிகளின் கீழ் கணக்கு வைக்கப்பட்ட தீயணைப்புப் பிரிவிற்குச் சொந்தமான ரூபா 39,000,000 பெறுமதியான 05 வாகனங்கள் 05 வருடகாலமாக தீயணைப்புப் பிரிவொன்று ஆரம்பிக்கப்படாத காரணத்தினால் எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் தீயணைப்புப் பிரிவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக பல்வேறு வகையான 1,296 தீயணைப்புப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் இருப்பொன்று எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் தீயணைப்புப் பிரிவில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தமை 2011 செப்தெம்பர் 20 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

### 2.5.2 நிலையான சொத்துப் பதிவேடு

சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிராததுடன் மாத்தறை பிரதேச சபையிலிருந்து 2006 ஒக்தோபர் 06 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்த ரூபா 75,573,000 பெறுமதியான 29 காணி மற்றும் கட்டிடங்கள் சபையின் ஏடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.5.3 கிடைக்க வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 8,315,937 ஆக இருந்ததுடன் 01 வருடத்தை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 8,314,540 ஆக காணப்பட்டது.

### 2.5.4 அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திலிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த பதவியணிக் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 11,194,937 ஆக இருந்தது. இம்மீதியினுள் இடமாற்றம் பெற்றுச் சென்ற, ஓய்வு பெற்ற மற்றும் வேலையை விட்டுச் சென்ற 110 உத்தியோகத்தர்களிடமிருந்தும் ரூபா 843,682 தொகையான மீதியொன்றை அறவிட முடியாதிருந்தது.

## 2.6 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

### 2.6.1 ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் 1204 ஸ்ரீ (எஸ்எப்) இன் நகர அபிவிருத்திப் பிரிவு செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட மாத்தறை பஸ்நிலையம் மற்றும் வியாபாரத் தொகுதி

---

மாத்தறை மாநகரசபை ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் இல. 1204 ஸ்ரீ(எஸ்எப்) நகர அபிவிருத்திப் பிரிவு செயற்திட்டத்தின் கீழ் ரூபா 96.4 மில்லியன் கிரயத்தில் மாத்தறை பஸ் நிலையம் மற்றும் வியாபாரத் தொகுதிகளை நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் 1995 சனவரி 03 ஆந் திகதி மற்றும் 1997 ஆகஸ்ட் 28 ஆந் திகதிகளில் மேலதிக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் நகர அபிவிருத்தி அதிகாரசபை செலவிட்டிருந்த செலவு ரூபா 108,204,397 ஆகும். இச் செலவினத்தில் ரூபா 49,774,022 தொகை கடனாகவும் ரூபா 37,871,539 தொகையானது கடைகள் கேள்வி கோரப்பட்டு பெறப்பட்ட ஒன்றுசேர்ந்த தொகையும் சேர்த்து ரூபா 87,645,561 கூட்டுத்தொகை செலுத்த வேண்டியிருந்தமையும் எஞ்சிய ரூபா 20,558,836 தொகை தொடர்பாக பிணக்குகள் இல்லாதிருந்தமையும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தின் 2001 மே 03 ஆந் திகதிய கடிதத்தில் காட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு.

(i) கடன் உடன்படிக்கையின் நிபந்தனை இல. 05 இன் பிரகாரம் நிர்மாணக் கிரயத்தில் மீளச் செலுத்த வேண்டிய 61.7% இற்கு அளவான ரூபா 66,762,112 தொகையானது செலுத்த வேண்டிய கடன் பணமாக ரூபா 87,645,561 எனக் கணக்கு வைக்கப்பட்டமையினால் ஏற்பட்ட ரூபா 20,883,449 வேறுபாட்டிற்கான காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) கடனை அறவீடு செய்வதற்கு கணிப்பீடு வெய்யப்பட்ட உடன்படிக்கைப் பெறுமதி ரூபா 108,204,397 ஆக இருந்த போதிலும் பற்றுச்சீட்டுக்களின் பிரகாரம் செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 107,662,426 ஆனமையால் வேறுபாடு ரூபா 541,970 ஆக இருந்தது.

(iii) உடன்படிக்கை நிபந்தனை இல. 05 இன் பிரகாரம் கடன் மீளச் செலுத்தல் இணைப்பு 02 இல் காணப்படுகின்ற பட்டோலையின் பிரகாரம் வட்டி மற்றும் தவணைப் பணமாக (1999 யூன் தொடக்கம் 2018) 20 வருடங்களில் ரூபா 126,480,000 தொகை செலுத்த வேண்டியிருந்தமை காட்டப்பட்டிருந்த போதிலும் ரூபா 49,774,022 தொகையான கடன் பணம் தீர்க்கப்பட வேண்டிய முறைகளைக்

காட்டுகின்ற பட்டோலையின் பிரகாரம் (2000 தொடக்கம் 2021) 21 வருடங்களில் தவணைப் பணம் மற்றும் வட்டியுமாக ரூபா 123,535,850 தொகை காட்டப்பட்டிருந்தமையால் வேறுபாடு ரூபா 2,944,150 ஆக இருந்தது.

(iv) உடன்படிக்கை நிபந்தனை இல. 04 இன் பிரகாரம் வியாபாரத் தொகுதியின் கடைகள் விற்பனையினால் கிடைக்கும் ஒன்று சேர்ந்த பணம் (Key money) தேசிய தரத்திலுள்ள வங்கியொன்றில் வைப்புச் செய்ய வேண்டியிருந்த போதிலு் அவை பிரதேச வங்கியான றுஹுணு அபிவிருத்தி வங்கியில் 14600 ஆம் இலக்க கணக்கில் வைப்பிலிடப்பட்டிருந்தது. இச் செயற்பாடு மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 185 மற்றும் 186 ஆம் பிரிவுகளுக்கு முரணாக அமைந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் கணக்குகளைப் பேணுவதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தரை நியமித்திருக்கவில்லை.

(v) சபையின் 2001 மார்ச் 28 ஆந் திகதிய சபைத் தீர்மானம் மற்றும் 2001 ஏப்ரல் 02 ஆற் திகதிய தலைவரின் கடிதம் என்பவற்றிற்கு முரணாகவும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின்றியும் 14600 ஆம் இலக்க கணக்கில் பணம், நிலையான வைப்புக்களில் முதலீடு செய்தல் உடன்படிக்கையின் இல. 9.03 இன் நிபந்தனை முறிக்கப்பட்டதாக காட்டப்பட்டிருந்த போதிலும் அத் தீர்மானத்திற்கு முரணாக மேற்கூறப்பட்ட வங்கியில் 13 நிலையான வைப்புக்களில் ரூபா 21,530,000 பணம் முதலீடு செய்யப்பட்டிருந்தது.

(vi) 1997 ஆகஸ்ட் 28 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனை இல. 04 இன் பிரகாரம் வியாபாரத் தொகுதியில் கடைகள் விற்பனையினால் பெறப்பட்ட பணம் கடன் பணத்தைத் தீர்ப்பதற்கு மாத்திரம் ஈடுபடுத்த வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்த போதிலும் அந் நியமங்களுக்கு முரணாக 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 5,625,000 தொகையில் தலைவருக்கு வாகனமொன்றும், ரூபா 9,500,000 தொகைக்கு வியாபாரத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக 05 நிலையான வைப்புக்களை பிணையான வைத்து கடன் பெறப்பட்டிருந்ததுடன் சபையின் பொதுக் கணக்கிற்குரிய 1660083158 ஆம் இலக்க கணக்கின் மேலதிகப் பற்றை தீர்ப்பதற்காக ரூபா 2,000,000 தொகையும் பெறப்பட்டிருந்தன.

மீளாய்வாண்டின் இறுதியில் வாகனக் கடனாக ரூபா 3,861,464 தொகையும் வியாபாரத் தொகுதிக்காக ரூபா 7,770,521 தொகையான கடன்தவணைப்பணமும்

செலுத்துவதற்கு எஞ்சியிருந்ததுடன் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கடன் செலுத்தப்படாததன் அடிப்படையில் பிணையாக வைக்கப்பட்ட நிலையான வைப்புக்கள் வங்கி வசமுள்ளதாகவும் காணப்பட்டது.

## 2.6.2 பொதுச் சந்தை வியாபாரத் தொகுதியின் முதலாவது மாடி கடைகள் நிர்மாணித்தல்

நடைபாதை வியாபாரிகளுக்காக பழைய பொதுச் சந்தைக் காணியில் அமைந்துள்ள வியாபாரத் தொகுதியின் முதலாவது மாடியின் கடைகளை நிர்மாணிப்பதற்காக தனியார் நிறுவனமொன்றுடன் 2007 ஏப்ரல் 18 ஆந் திகதி ரூபா 7,350,093 தொகையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ரூபா 6,412,472 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் நிர்மாணிக்கப்பட்ட 104 கடைகளையும் வாடகைக்கு விடுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு.

(i) 2007 பெப்ரவரி 15 ஆந் திகதிய 74 ஆம் இலக்க நிலையான செயற்குழுவினதும் 2007 மார்ச் 08 ஆந் திகதிய பொதுக்கூட்டத்தில் இதில் கட்டிடத்தை அமைப்பதற்காக றுஹுணு அபிவிருத்தி வங்கியில் ரூபா 7,500,000 கடன் தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் கடன் தொகை ரூபா 9,500,000 ஆகக் காணப்பட்டது அதன் பிரகாரம் இரண்டு சந்தர்ப்பங்களில் ரூபா 6,500,000 கிடைத்திருந்தது. எனினும் வங்கி முகாமையாளரின் 2011 மார்ச் 03 ஆந் திகதிய கடிதத்தின் படி கடன்தொகை ரூபா 9,500,000 ஆக இருந்தமையும் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த மீதி ரூபா 7,770,521 ஆகக் காட்டப்பட்டிருந்த போதிலும் வழங்கப்பட்ட கடன்தொகை ரூபா 3,000,000 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ii) உடன்படிக்கை நிபந்தனை இல. 01 இன் படி 60 தவணைகளில் சபையினால் செலுத்துவதற்கு ஏற்படும் தொகை ரூபா 12,751,462 ஆக இருந்ததுடன் நிர்மாணிக்கப்பட்ட 194 கடைகள் தொடர்பாக 2011 ஏப்ரல் 29 ஆந் திகதிய களப்பரிசோதனைச் சந்தர்ப்பம் வரையிலும் கடைகளில் 80% அதாவது 83 கடைகள் எந்த வியாபாரச் செயற்பாடுகளுமின்றி மூடப்பட்டிருந்த காரணத்தினால் சபை நிதியம் பொது மக்களின் நலன்களில் ஈடுபடுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) ரூபா 6,412,472 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட வியாபாரத் தொகுதியின் மலசலகூடம் மற்றும் ஏனைய சுகாதார வசதிகளை

வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கடைத் தொகுதியில் வியாபாரிகள் மற்றும் நுகரும் மக்கள் வசதியீனங்களுக்கு முகம்கொடுக்கப்பட்டிருந்தமையும் களப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

### 2.6.3 மாநகர சபை எல்லையிலுள்ள வீதிகளின் வடிகாண்களைச் சுத்திகரித்தல்

சபை அதிகாரப் பிரதேசத்தில்லுள்ள வீதிகளின் வடிகாண்களை சுத்திகரிப்பதற்காக 2009 மற்றும் 2010 ஆண்டுகளில் ரூபா 7,081,307 தொகையான சம்பளக் கொடுப்பனவு தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு.

(i) சபை அதிகாரப் பிரதேசத்தில் பராமரிக்கப்படுகின்ற வடிகாண்களுக்குரிய வீதிகளில் காணின் நீளம், அகலம், காண் தொடங்கும் மற்றும் முடிவடையும் இடங்களின் ஆதனவரி இலக்கம் அல்லது வேறு இனங்காணக்கூடிய குறியீடுகள் போன்ற விபரங்கள் சபையிடம் காணப்படவில்லை.

(ii) ஒவ்வொரு காண்களையும் பராமரிப்பதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு, ஈடுபடுத்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை, நாளாந்த வேலை பகிர்ந்தளித்தல் பிரதிகள் என்பன காணப்படாததுடன் அந்தந்த வருடங்களில் பராமரிக்கப்பட்ட காண்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களும் காணப்படவில்லை.

(iii) கழிவுக் காண்களை சுத்திகரிப்பதற்கு தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்ற எண்ணிக்கை தொடர்பாக உரிய முறையில் இனங்காணப்பட்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு நிதிச் செயற்குழுவிடம் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட அளவினை விட 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 107,660 தொகையும் 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 53,079 தொகையும் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தன.

### 2.7 ஆசிய அர்ப்ஸ் செயற்திட்டம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் பூகோள தகவல் முறைமையொன்றைத் தயாரிக்கும் நோக்கத்தில் மொரட்டுவ பல்கலைக்கழகம், சர்வதேச பல்கலைக்கழகங்கள் மற்றும் வெளிநாட்டு மாநகர சபைகள் சிலவற்றுடன் தொடர்புபட்ட ஐரோப்பிய யூனியனின்

பெல்ஜியம் கத்தோலிக்க பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள லியுவன் நிறுவனம் தொடர்புபடுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக யூரோ 27,482 அதற்குச் சமனான ரூபா 3,380,286 தொகையும் ரூபா 918,197 தொகை பங்களிப்புடன் கூடிய செலவினங்கள் இலக்கில் கொள்ளப்பட வேண்டும். இச் செயற்திட்டத்திற்காக 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் ஆசிய அர்பஸ் நிறுவனம் மற்றும் சபை பங்களிப்பு என்பன முறையே ரூபா 2,520,337 மற்றும் ரூபா 446,785 தொகைகளாக ரூபா 2,967,122 கூட்டுத்தொகையான நிதி செலவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நி.பி 610 இன் பிரகாரம் வெளிநாட்டு உதவிகளுக்கான சகல கலந்துரையாடல்களும் திறைசேரியின் வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் அல்லது செயற்திட்டத்தின் செயற்பாடுகளுக்காக வெளிநாட்டு உதவி பெறமுடியுமா என்பன தொடர்பாக சகல விசாரணைகளும் வெளிநாட்டு வளத் திணைக்களத்தினர் பணிப்பாளர் நாயகமாக இருந்த போதிலும் இச் செயற்திட்டம் சட்ட ரீதியாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இச் செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்களுக்காக 2005 யூலை 29 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட இல. 1989588 உடைய இலங்கை வங்கிக் கணக்கில் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 யூன் 29 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் ரூபா 3,472,101 தொகையான பெறுவனவுகள் (யூரோ 27,481.46) மற்றும் ரூபா 2,967,122 தொகையான கொடுப்பனவுகளில் நி.பி 185 இன் பிரகாரம் காசேடு மற்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தயாரித்தல் நி.பி 395 இன் பிரகாரம் வங்கிக் கணக்கிணக்கக்கூற்று தயாரித்தல் என்பன செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 185 மற்றும் 186 ஆம் பிரிவுகளின் பிரகாரம் சபைக்குக் கிடைக்கின்ற சகல பெறுவனவுகளும் சபை நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிராததுடன் நிதிக் கூற்றுக்களிலும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) செயற்திட்டத்திற்காக நிதியத்தை வழங்கிய நிறுவனத்துடன் உடன்படிக்கையொன்றில் உடன்பட்டு கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. காலாண்டு அறிக்கை மற்றும் செலவின அறிக்கைகள் அனுப்புதல் மேற்கொள்ளப்பட்டிராததுடன் 2007 யூன் 30 ஆந் திகதியில் எஞ்சியிருந்த ரூபா

952,265 தொகை நிதியத்தை வழங்கிய நிறுவனத்திற்கு மீள அனுப்பி வைக்கப்படாமல் சபையின் அபிவிருத்திக் கணக்கில் செலவிடப்பட்டிருந்தது.

(உ) இச் செயற்திட்டத்தின் கீழ் சபையில் செயலாற்றுகின்ற 04 உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டு சுற்றுலாவிற்காக (யூரோ 3,300) ரூபா 415,260 உச்ச தொகையின் கீழ் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் இந்தியாவில் மும்பாய் நகரில் களப் பரிசோதனைக்கு செல்வதற்காக ரூபா 485,499 தொகையும் பாகிஸ்தானின் கராச்சி நகர சுற்றுலாவிற்காக ரூபா 566,580 தொகையும் ஆக ரூபா 1,052,079 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) செயற்திட்டத்திற்காக ரூபா 265,700 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட கணனி, ஸ்கேன் இயந்திரம் மற்றும் அச்சிடல் இயந்திரம் என்பன செயற்திட்ட செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படாமல் செயற்பாடின்றிக் காணப்பட்டதுடன் ரூபா 703,782 தொகை செலவில் கொள்வனவு செய்யப்பட்ட பூகோள தகவல் முறைமையினை (Preparation GIS data base) பயன்பாட்டிற்கு எடுத்தல் 2011 யூலை 31 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்க வில்லை.

(எ) இச் செயற்திட்டத்தினால் எதிர்பார்க்கப்பட்ட பின்வரும் நோக்கங்கள் 2011 யூலை 31 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்படுவதற்கு சபை இயலாதிருந்தமையினால் நிதி உதவிகள் மற்றும் சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்ட ரூபா 2,967,122 செலவினங்கள் விளைவற்றிருந்தது.

- ❖ மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தைக் காட்டுகின்ற வரைபடம் (Base map) தயாரிக்கப்பட்டிராமை.
- ❖ பூகோள தகவல் முறைமையைப் பாவிக்கக் கூடிய கணனி ஒன்றைக் கொள்வனவு செய்யாமை.
- ❖ பூகோள தகவல் முறைமையின் தொழில்நுட்பம் தொடர்பாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படாமை.
- ❖ சமிக்ஞை குறிப்பீட்டு வரைபடம் தொடர்பாக (Sansitive maps) அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்படாமை.

**2.8 கட்டிட விண்ணப்பங்களுக்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் விநியோகித்தலும் இணக்கச் சான்றிதழ் விநியோகித்தலும்.**

---

1984 இன் 44 ஆம் இலக்கம் மற்றும் 1982 இன் 4 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1976 இன் 41 இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 8(ஏ) பிரிவின் பிரகாரம் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் 836 கட்டிட விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன் அக் கட்டிடங்களுக்காக அபிவிருத்தி அனுமதிப் பத்திரம் விநியோகிக்கின்ற போது தெரிவின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 37 மூன்று மாடிக் கட்டிடங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் வருமாறு.

(அ) நகர அபிவிருத்தி மற்றும் புனித நிலங்கள் அபிவிருத்தி அமைச்சின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானியின் V ஆவது பட்டோலையின் 1.11 இன் பிரகாரம் 07 கட்டிட விண்ணப்பங்களிலிருந்து ரூபா 20,308 தொகை செயன்முறைக் கட்டணங்கள் குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) மேற்கூறப்பட்ட வாத்தமானியின் 6(vii) ஆம் பந்தியின் பிரகாரம் இணக்கச் சான்றிதழ் இன்றி வசிப்பதற்கு/ பயன்படுத்துவதற்காக நாளொன்றுக்கு ரூபா 50 படி கட்டணம் அறவிடவேண்டியிருந்த போதிலும் அவ்வாறின்றி 04 சந்தர்ப்பங்களில் ரூபா 58,800 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) மேற்கூறப்பட்ட வர்த்தமானியின் 6(ii) ஆம் பந்தியின் பிரகாரம் எவ்வித அபிவிருத்தி அனுமதிப்பத்திரமும் இன்றி நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களுக்காக காப்பு அங்கீகாரம் வழங்குகின்ற போது அறவிட வேண்டிய கட்டணம் குறைவாக அறவிடப்பட்டிருந்த மற்றும் முழுத் தொகையும் அறவிடப்படாத 05 சந்தர்ப்பங்களில் ரூபா 5,614,670 தொகை அறவிட வேண்டியிருந்தது.

(ஈ) மேற்கூறப்பட்ட வர்த்தமானியின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் மோட்டார் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படும் இடங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கட்டளையின் கீழ் திட்டத்தில் காண்பிக்கப்பட வேண்டியமை தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு வழங்கப்படாத ஒரு மோட்டர் வாகனத்திற்காக அறவிட வேண்டிய சேவைக் கட்டணம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. கட்டிடத் திட்டத்தில் வாகனங்கள் நிறுத்தப்படும் இடங்கள் காட்டப்பட்டிருந்த போதிலும் 2011 ஆகஸ்ட் 05 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது அவ்வாறு வாகனங்கள் நிறுத்தும் இடங்கள் காணப்படாதிருந்ததுடன் அவ்வாறான 05 சந்தர்ப்பங்களில் ரூபா 10,500,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) பீஏ/245/2009 ஆம் இலக்க கட்டிட திட்டத்தில் விடுதிக் கட்டிடத்திற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2011 ஆகஸ்ட் 05 ஆந் திகதிய களப்பரிசோதனைச் சந்தர்ப்பம் வரையில் கட்டிடத்தில் ஹோட்டல் வியாபாரமொன்று நடாத்தப்பட்டிருந்ததுடன் மேற்கூறப்பட்ட வர்த்தமானியின் 7(ii) ஆம் பந்தியின் பிரகாரம் கட்டிடத்தின் பயன்பாட்டை மாற்றியதற்காக அறவிட வேண்டிய ரூபா 631,100 கட்டணத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் 1986 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 04 ஆம் இலக்க திட்டமிடல் சுற்றுநிருபத்தின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் கட்டிடத்தின் பாவனை மாற்றம் தொடர்பான மெய்மையாய்வுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.9 வாகனக் கட்டுப்பாடு

சபையின் போக்குவரத்து அணிக்குச் சொந்தமான 08 வாகனங்கள் பாவனைக்கு உதவாது என ஒட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் அவ்வாகனங்களுக்காக வருமான அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதியினைச் செய்வதற்காக முறையே ரூபா 5,925 மற்றும் ரூபா 38,778 தொகைகள் செலவிடப்பட்டிருந்தன.

## 2.10 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) பதவியணிக் கடன் கட்டுப்பாடு
(ஊ) வாகனக் கட்டுப்பாடு